**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (“அதிகாரசபை”) 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 - ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | | |
| (i) | நியமத்தின் பிரிவு 51 மற்றும் அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கையின் எண் 4.8 இன் பிரகாரம், நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப்பெறுமதி என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். ஏதேனும், வேறுபாடுகள் காணப்பட்டால், இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம், கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 2,231,885,553 முன்கொண்டு செல்லும் பெறுமதியினைக் கொண்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை (CAASL) ஆனது 2021 ஆம் ஆண்டின் போது சொத்துக்களின் மதிப்பீட்டினையும் பயன்தரு ஆயுட்காலத்தின் மீள் மதிப்பீட்டினையும் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்தது. ஆனால், நாட்டின் கொவிட் நிலைமையுடனான சிரமங்கள் காரணமாக இந்த கோரிக்கைக்கு விலை மதிப்பீட்டு திணைக்களம் பதிலளிக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது இதனை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம், நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த ரூபா 172,661,470 கிரயத்திலான முழுமையாக பெறுமானத் தேய்வு செய்ய்பபட்ட சொத்துக்களை அதிகாரசபை மீள் மதிப்பீடு செய்திருக்கவில்லை. | மேற்குறிப்பிட்ட 1.5.1(i) இன் அதே பதில் | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 யூலை 18 ஆம் திகதியிடப்பட்ட 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாமல் படிகளினை கொடுப்பனவு செய்யக்கூடாது. எனினும், பணிப்பாளர்கள் சபையின் தீர்மானமொன்றின் பிரகாரம், 2018 மே மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகார சபையின் உயர் மட்ட முகாமைத்துவத்தின் 27 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 50,000 முகாமைத்துவ படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து மீளாய்வாண்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 13,061,742 தொகை உள்ளடங்கலாக 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை அதிகார சபையினால் ரூபா 50,128,553 தொகை மொத்த படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் 7(ந)வின் பகுதி II மற்றும் பிரிவு 18 இன் பகுதி V இன் பிரகாரம், பணியாளர்களின் ஊதியங்களை கையாள்வதில் பணிப்பாளர்கள் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், சபைத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தர்களுக்கு புதிய படிகளை வழங்குவதில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டியவைகள் மற்றும் கொடுக்க வேண்டியவைகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொள்வனவுகள் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து கிடைக்கப்பெற | கலந்துரையாடல்களும், பின் தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன மற்றும் பணத்தினை மீளப்பெறுவதில் எவ்வித | பெறவேண்டிய பெறுமதி சேர் வரியினை தீர்ப்பனவு செய்வதற்கு வெகு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (உள்ளீட்டு வரி) ரூபா 251,139,837 தொகை ஆகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வயதுப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம், அவற்றில் ஐந்து வருடங்களுக்கு மேலாக கிடைக்கப்பெற வேண்டியவைகள் ரூபா 33,149,196 ஆக இருந்தது. கிடைக்கப்பெற வேண்டிய இந்த வரியினை கழிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்த போதிலும், இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சந்தேகமும் இல்லை. எனவே, இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 329,898,389 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 237,151,840 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 92,746,549ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கோவிட் 19 தொற்றுநோய்க்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அதே வேளையில் நாட்டில் நிலவிய சாதகமான சூழ்நிலை காரணமாக செயற்பாட்டு வருமானம் முந்தைய ஆண்டின் ரூபா 803,216,822 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 993,344,282 ஆக ரூபா 190,127,460 ஆல் அதிகரித்ததே இந்தச் முன்னேற்றத்திற்கு முக்கியமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | **2021 (ரூபா மில்லியன்)** | **2020 (ரூபா மில்லியன்)** | **மாற்றம் (ரூபா மில்லியன்)** | **மாற்றத்தின் சதவீதம் %** |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | **993** | **803** | **190** | **24** |
| வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம் | 892 | 680 | 212 | 31 |
| புறப்படுகை தீர்வை (Embarkation Levy) சேவைக் கட்டணம் | 33 | 61 | (28) | (46) |
| ஒழுங்குமுறை | 68 | 62 | 6 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| சேவைகளிலிருந்தான வருமானம் | | | | |
| **செயற்பாடற்ற வருமானம்** | **135** | **183** | **(48)** | **(26)** |
| வட்டி வருமானம் | 121 | 168 | (47) | (28) |
| **பணியாளர் செலவினங்கள்** | **357** | **354** | **3** | **1** |
| **நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்** | **196** | **185** | **11** | **6** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டுக்கான மொத்த வருமானம் 14 சதவீதத்திற்கு சமமான ரூபா 142,040,361 ஆல் அதிகரித்துள்ளது.

(ii) புறப்படுகை தீர்வை (Embarkation Levy) அறவீட்டில் ஏற்பட்ட குறைவின் காரணமாக மீளாய்வாண்டில் புறப்படுகை தீர்வை சேவைக் கட்டணத்தின் வருமானம் ரூபா 61 மில்லியனில் இருந்து ரூபா 33 மில்லியனுக்கு 46 சதவீதத்தினால் குறைந்துள்ளது.

(iii) பிரதானமாக வட்டி வருமாத்தில் ரூபா 48 மில்லியன் குறைவடைந்தததன் காரணமாக, மீளாய்வாண்டின் போதான செயற்பாடற்ற வருமானம் முந்தைய ஆண்டுக்கான ரூபா 183 மில்லியனிலிருந்து ரூபா 135 மில்லியனாக 26 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | **2021** | **2020** |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2.1:1 | 1.7:1 |
| உரிமையாண்மை விகிதம் | 69% | 62% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2020 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம் 1.7:1 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அது 2.1:1 ஆக அதிகரித்துள்ளது. வியாபார செண்மதிகளில் ரூபா 655 மில்லியன் குறைவடைந்தமை, திறைசேரி வைப்புக்களில் ரூபா 172 மில்லியன் அதிகரித்தமை மற்றும் காசும் காசுக்கு சமனானவைகளில் ரூபா 90 மில்லியன் அதிகரித்தமை என்பன இதற்கு பிரதானமாக இருக்கின்றன.

(ii) சொத்துக்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்களின் அசைவின் பிரகாரம், உரிமைகள் 6 சதவீதத்தை குறிக்கும் ரூபா 262 மில்லியனால் அதிகரித்திருந்த அதே வேளை மொத்த சொத்துக்கள் 5 சதவீதத்திற்கு சமனான ரூபா 340 மில்லியனால் குறைவடைந்துள்ளதுடன் 2020

ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் மொத்த பொறுப்புக்கள் ரூபா 603 மில்லியனால் அல்லது 23 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், இலங்கையின் ஆள்புல எல்லையினுள் சிவில் விமான செயற்பாடுகளையும் அத்துடன் இலங்கையின் ஆள்புலத்திற்கு வெளியே பதிவு செய்யப்பட்ட இலங்கை விமானங்களின் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தல், இலங்கை தேசிய விமானப் போக்குவரத்து கொள்கையை வடிவமைப்பதில் உதவுதல், இலங்கைக்கான விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல், விமானப் போக்குவரத்து பாதுகாப்பின் உயர் தரநியமங்களை பேணுதல், விமானப் போக்குவரத்து துறையுடன் தொடர்புடைய சான்றிதழ்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களினை வழங்குதல், வானூர்த்தி விபத்துக்கள் மீது புலனாய்வினை செய்தல், சர்வதேச சிவில் விமான போக்குவரத்து நிறுவனங்களுடன் ஒழுங்கிணைப்பு செய்தல் முதலியன அதிகாரசபையின் முக்கிய குறிக்கோள்களாக இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதில் 16 பிரிவுகளுடன் தொடர்புடைய பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPIs) அதிகார சபையால் உருவாக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் ஆகிய | செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் ஆகிய இரண்டிலும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளின் (KPI) இலக்குகள் வகுக்கப்பட்டுள்ளன. | நேர இலக்குகள் மாத்திரம் வகுக்கப்பட்டிருந்தன. செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் ஆகிய இரண்டிலும் KPI களின் அளவு ரீதியான இலக்குகள் வகுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டிலும் KPI களின் இலக்குகள் வகுக்கப்பட்டிருக்காமையினால் இலக்குகளுடன் KPI களின் செயல் முன்னேற்றத்தினை ஒப்பிட முடிந்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கைக்கான விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டமொன்று 2022 செப்தெம்பர் 30 வரையிலும் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கைக்கான விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கைக்கான விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டமொன்று அதிகார சபையினால் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப கட்ட சேவைக் கட்டணத்தினை கொடுப்பனவு செய்த பின்னரும் உரிமம் கிடைக்கப்பெற்று இரண்டு வாரங்களுக்குள்ளும் மனித வள தகவல் முறைமையினை (HRIS) செயல்படுத்தி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 8.20 ஆம் பந்தியின் பிரகாரம், அடிப்படை உற்பத்தி பொருளின் முதல் சோதனை ஓட்டம் 2020 மே 01 அன்று தொடங்கப்பட்டிருக்க வேண்டும். 2020 ஆகஸ்ட் 11 அன்று உரிமக்கட்டணத்தினை அதிகார சபை செலுத்தியிருந்தது மற்றும் முறைமையானது 2020 ஆகஸ்ட் 25 இற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2022 மார்ச் 31 இல் கூட ஐந்து தெகுதிகளில் (modules) இரண்டு தெகுதிகள் மாத்திரம் செயல்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், உடன்படிக்கையில் நிறைவு செய்யும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கடந்த இரண்டு வருடங்களின் போதான கொவிட் - 19 நிலைமை காரணமாக வெளித்தரப்பினருடன் ஒன்று சேர்ந்து பணிகளை செய்வதற்கு வரையறுக்கப்பட்ட பௌதீக வேலை நாட்கள் இருந்ததே தாமதத்திற்கான பிரதான காரணமாகும். சில செயற்பாடுகளுக்கு HRIS முறைமையினை CAASL பயன்படுத்துகின்றது. Chat-bot தெகுதியொன்று இறுதியாக நிறைவு செய்யப்படாமையின் காரணமாக இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. இந்த தொகுதி AI (செயற்கை நுண்ணறிவு) உடன் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியொன்றை கொண்டுள்ளது. இது அபிவிருத்தி செய்வதற்கு மிகவும் சிக்கலான தொகுதி | ஒப்பந்தத்திற்கான காலப்பகுதியை நீடிப்பதற்காக சம்பந்தப்பட்ட பெறுகை குழுவின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் மற்றும் வினைத்திறனானதும் விளைதிறனானதுமான முறையில் முறைமையானது செயல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும், ஒப்பந்த காலப்பகுதியை நீடிப்பதற்கான திணைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆகும். மென்பொருள் விற்பனையாளரின் கூற்றின் பிரகாரம், அவர்கள் Chat-bot செயலாக்கத்தின் இறுதிக்கட்டத்தில் தற்போது இருக்கிறார்கள். | |
| (ஆ) | 2019 ஒக்தோபர் 11 அன்று எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், பிராந்திய வர்த்தக விமானங்களின் செயல்பாட்டிற்காக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்படும் புறப்படுகை தீர்வை (Embarkation Leavy) இல் இருந்து ரூபா 1,050,000 தொகையொன்று இரண்டு வருடங்களுக்கு மேலாக வைப்பொன்றாக தக்க வைக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், 2022 ஆகஸ்ட் 31 வரையிலும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் அபிவிருத்தியினை ஆரம்பிப்பதற்கு அதிகார சபையினால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அலயன்ஸ் எயர் (Alliance Air) நிறுவனம் 2022 இன் குளிர் கால அட்டவணையில் செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்களை சமர்ப்பித்துள்ளது. | வைப்பு தொகையினை தக்க வைத்துக் கொள்ளுவதன் அவசியத்தினை பகுப்பாய்வு செய்து விளைதிறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக 2019 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 617,131,323 மொத்த கிரயமொன்றினை அதிகாரசபை செலவு செய்துள்ளது. விமான நிலையம் 2019 இல் செயல்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், கொவிட் - 19 தொற்று பரவல் காரணமாக 2020 மார்ச் முதல் அதன் செயல்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர், பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக ஏற்பட்ட கிரயம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அலயன்ஸ் எயர் (Alliance Air) நிறுவனம் 2022 இன் குளிர் கால அட்டவணையில் செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்களை சமர்ப்பித்துள்ளது. | சொத்து குறைந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. எனவே, பலாலி விமான நிலையத்தினை செலவு குறைந்த முறையில் பயன்படுத்த வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பறப்பதற்கான தகுதி (Airworthiness), தனிப்பட்ட உரிமம் வழங்கல் (Personal Licensing), வானூர்த்தி தளம் (Aerodromes), வான் வழி பயண சேவைகள் (Navigation Services) மற்றும் வெளிப்புற மூலங்களில் இருந்தான பாதுகாப்பு சேவைகள் (Aviation Security) என்பவற்றில் தெரிவுசெய்யப்பட்ட சிவில் விமான பரிசோதகர்களினைக் கொண்ட குழாம் ஒன்றை (Pool) உருவாக்குவதற்கு 2017 யூலை 27 அன்று சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஒக்தோபர் 01 முதல் 2023 பெப்ரவரி 28 வரை அதிகாரசபைக்கு தெரிவுசெய்யப்பட்ட பரிசோதகராக நியமிக்கப்பட்ட ஊழியரொருவர் தொழில்நுட்பம் சாராத கடமைகளை செய்து கொண்டிருந்ததையும் 2022 ஏப்ரல் வரை கூட்டு மொத்தமாக ரூபா 770,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. | 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான போக்குவரத்து சட்டத்தினூடாக வழங்கப்பட்ட அதிகாரங்களை கருத்திற் கொண்டு விமான போக்குவரத்தின் தொழிநுட்ப பகுதியில் குறிப்பாக வருமான பிரிவில் நபரொருவரை பணிக்கமர்த்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. புறப்படுகை தீர்வையின் ஊடான வருமானத்தினை அந்த உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் தீர்வையினை சேகரிக்கும் நேரத்தில் CAASL இனால் உறுதிப்படுத்த முடியாத குறிப்பிட்ட சில வரிகளை அது உள்ளடக்கியுள்ளது. இது இலத்திரனியல் பயணச் சீட்டிற்காக பயன்படுத்தப்பட்ட பட்டியல் தீர்ப்பனவு திட்டத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது மற்றும் அனுப்பப்பட்டிருக்க வேண்டிய குறிப்பிட்ட சில பணத்தை CAASL இழக்கின்றது. இந்த முறைமைகளை பற்றி போதிய அறிவு இல்லாமையினால் விமான போக்குவரத்து முறைமைகளுடன் தொடர்புபட்ட அதிகமான வருமான வழிமுறைகளை ஆய்வு செய்யவும் உறுதிப்படுத்தவும் அந்த உத்தியோகத்தர் பணிக்கமர்த்தப்பட்டார். | தேர்வுசெய்யப்பட்ட சிவில் விமான பரிசோதகர்களை கொண்ட தொகுதி முறையொன்று சபைத் தீர்மானத்தின் அடையாளம் காணப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு உருவாக்கப்படல் வேண்டும் மற்றும் அவசியமற்ற ஆட்சேர்ப்புக்கள் மற்றும் கொடுப்பனவுகள் தவிர்க்கப்படல் வேண்டும். |